# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+' தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024.**


தொலைபேசி : 0431-2407016/2407060
தொலை நகலி : 0431-2407444

**முனைவர் சீனிவாசராகவன்**, எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பி.எச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ)

மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
வலைதளம் : **www.bdu.ac.in**


---

இ.நி.தே.பி./பட்டயம்/சான்றிதழ்/நவம்பர் 2022 தேர்வு/01 நாள்: 05.11.2022

பெறுநர்

1.முதல்வர் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்று தன்னாட்சி பெறாத, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள்.

2.முதல்வர்/இயக்குநர் அவர்கள், **BDU-BDC**-ன் வெளிவளாக திட்டம் வாயிலாக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள், நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள்.

அய்யா/அம்மா,

பொருள்: தேர்வுப் பிரிவு - பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான நவம்பர் 2022 தேர்வுக்கு - தேர்வு விண்ணப்பங்கள் பெறுவது - எழுத்துத் தேர்வுகள் மற்றும் செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவற்றைத் தெரிவிப்பது - தொடர்பாக.

பார்வை: 1.தேர்வுக் கட்டணம் தொடர்பான துணைவேந்தரது அனுமதி ஆணை நாள்: 28.10.2022.
2.நவம்பர் 2022 தேர்வு நடத்துவதற்கான துணைவேந்தரது அனுமதி ஆணை நாள்: 04.11.2022.

------------

நவம்பர் 2022 பருவத்திற்கான பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான தேர்வுகளுக்கு பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் தேர்வுக் கட்டணத்துடன் பெறுவதற்கான கடைசி நாள், எழுத்துத் தேர்வுகள்/செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் மற்றும் தேர்வுகள் சம்பந்தமான தகவல்கள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, இத்தகவல்களை பின்பற்றி செயல்படுத்த சம்பந்தப்பட்ட முதல்வர்கள்/இயக்குநர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தண்டத் தொகையின்றி மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு கடைசி நாள் | **18.11.2022** | வெள்ளிக்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தண்டத் தொகையுடன் மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு கடைசி நாள்<br>(18.11.2022–க்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ரூ.300/- தண்டத் தொகையுடன் 18 % **GST** தொகையையும் சேர்த்து கூடுதலாக செலுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்) | **25.11.2022** | வெள்ளிக்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **28.11.2022** | திங்கள்கிழமை |
| பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள்<br>(இளநிலை பட்டம் (UG) பயின்றுகொண்டிருக்கும் மாணாக்கர்களும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளைப் பயில்வதால் இளநிலைத் தேர்வுகள் முடியும் 27.12.2022 தேதிக்குப் பிறகு எழுத்துத் தேர்வுகளுக்கான தேதி நிர்ணயம் செய்யப்படுகிறது) | **28.12.2022** | புதன்கிழமை |

செய்முறைத் தேர்வுகளை, தங்கள் கல்லூரியிலிருந்து தேர்வு விண்ணப்பங்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்த தேதியிலிருந்து எழுத்துத் தேர்வுகள் ஆரம்பிக்கும் 28.12.2022 -ஆம் தேதிக்குள் நடத்தி முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும், கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான தேர்வுக் கட்டண விவரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| **1.** | தேர்வு விண்ணப்பப் பரிசீலனைக் கட்டணம் | ரூ. 75/- | ----- |
| **2.** | எழுத்துத் தேர்வு - தாள் ஒன்றுக்கு | ரூ. 120/- | ----- |
| **3.** | செய்முறைத் தேர்வு - தாள் ஒன்றுக்கு | ரூ. 150/- | **(3 Hours Practical)** |
| | செய்முறைத் தேர்வு - தாள் ஒன்றுக்கு | ரூ. 300/- | **(6 Hours Practical)** |
| **4.** | பருவ மதிப்பெண் பட்டியல் - ஒன்றுக்கு | ரூ. 125/- | ----- |
| **5.** | கூட்டு மதிப்பெண் பட்டியல் (1 வருட / 2 வருட படிப்பு) | ரூ. 300/- | ----- |
| | கூட்டு மதிப்பெண் பட்டியல் (3 வருட படிப்பு) | ரூ. 400/- | ----- |
| | கூட்டு மதிப்பெண் பட்டியல் (5 வருட படிப்பு) | ரூ. 1,000/- | ----- |
| **6.** | தற்காலிகச் சான்றிதழ் | ரூ. 400/- | ----- |
| **7.** | பட்டமளிப்புச் சான்றிதழ் | ரூ. 1,000/- | ----- |

இறுதி பருவம்/ஆண்டு பயிலும் மாணாக்கர்கள் அனைவரும் வரிசை எண் 5,6,7-ல் குறிப்பிட்டுள்ள தொகையை தேர்வு விண்ணப்பக் கட்டணத்துடன் அவசியம் செலுத்த வேண்டும்.

2022-2023 கல்வியாண்டில் முதல் பருவம் மற்றும் அல்பருவ முறையில் முதல் வருடம் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களுடைய சுயவிவரங்களை **(Bio-data) +2** மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு பெயர் **(Name)**, தலைப்பெழுத்து **(Initial)**, பிறந்த தேதி **(Date of Birth)**, கைப்பேசி எண் **(Cell Number)** மற்றும் விலாசம் **(Address)** ஆகியவற்றினை 18.11.2022-ஆம் தேதிக்குள் பல்கலைக்கழக இணையதளத்தில் **(Web Portal)** பதிவேற்றம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, தற்பொழுது நவம்பர் 2022-ல் தேர்வு எழுத இருக்கும் மாணாக்கர்களுடைய பட்டயம்/சான்றிதழ் படிப்பிற்கான பாடக்குறியீடுகளையும் **(Subject Code)** பாடத்தலைப்புகளையும் **(Subject Title)** பல்கலைக்கழக இணையதளத்தில் **(Web Portal) 25.11.2022**-க்குள் பதிவேற்றம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. அல்பருவ முறையில் **(Non Semester)** சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் ஏப்ரல் 2023-ல் தேர்வு எழுத இருப்பதால் சுயவிவரங்களை மட்டும் தற்பொழுது பதிவேற்றம் செய்திடல் போதுமானது.

பல்கலைக்கழக இணையதளத்தில் **(Web Portal)** நவம்பர் 2022 தேர்வுக்கு 25.11.2022-க்குள் பதிவேற்றம் செய்திட்ட மாணாக்கர்களுடைய தேர்வு விண்ணப்பங்களைப் பாடவாரியாக என தனித்தனியான இணைப்புக் கடிதங்களுடன் 28.11.2022-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட **e-receipt**-வுடன் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியல் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். இத்துடன் மாணாக்கர்களின் வருகைப்பதிவுச் சான்று அவசியம் இணைக்கப்பட வேண்டும். மேலும், தங்களது கல்லூரி/நிறுவனம்/மருத்துவமனையில் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் கூடுதல் இடங்கள் ஆகியவை குறித்து பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட கடித நகல்களையும் இணைக்கப்படவேண்டும்.

செய்முறைத் தேர்வுகள் நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத் தேர்வுக் கால அட்டவணையை மூன்று நகல்களாக தயார் செய்து தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி தேர்வு நெறியாளரின் ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளரின் ஆணையின்படி, நவம்பர் 2022 செய்முறைத் தேர்விற்கு நியமனம் செய்யப்பட்ட புறத்தேர்வாளர்கள் தேர்வுப் பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள்/தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத்தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு புறத்தேர்வாளரை நியமித்து செய்முறைத்தேர்வை நடத்தியிருந்தால் அதற்கான ஒப்புதல் கடிதம் (**Ratification Letter**) தேர்வு நெறியாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

எழுத்துத் தேர்வின் அகமதிப்பெண்களையும் (**Theory Internal Marks**), செய்முறைத் தேர்வின் அக மதிப்பெண்களையும் (**Practical Internal Marks**) மற்றும் செய்முறைத் தேர்வின் புற மதிப்பெண்களையும் ( **Practical External Marks**) அக/புறத் தேர்வாளர்கள், துறைத்தலைவர் மற்றும் முதல்வர் கையொப்பத்துடன் உரிய காலத்திற்குள் பல்கலைக்கழக இணையதளத்தில் (**Web Portal**) பதிவேற்றம் செய்வதுடன் அதனை அச்சு நகலாகவும் (**Hard Copy**) தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு விண்ணப்பங்களை பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் (**Website**) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தேர்வு விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட கல்லூரிகள்/நிறுவனங்கள்/மருத்துவமனைகள் வாயிலாக பரிந்துரைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு வந்துசேரவேண்டிய கடைசி நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

.

தேர்வு நெறியாளர் (பொ)